# மெட்ரோ ரயில் பயண அட்டையை பயன்படுத்தி வாகன நிறுத்த கட்டணம் செலுத்தும் வசதி

- அமைச்சர் சம்பத் தொடங்கிவைத்தார்

■ சென்னை

சென்னை கோயம்பேட்டில் நேற்று நடைபெற்ற விழாவில், தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் கலந்து கொண்டு, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் 'அப்னா பே' திறன்மிக்க விற்பனை முனைய இயந்திர உதவியுடன் செயல்படும் 'தானியங்கி வாகன நிறுத்த மேலாண்மை' திட்டத்தை தொடங்கிவைத்தார். மேலும், 1.2 மெகா வாட் சூரியசக்தி மின் உற்பத்தியையும் கோயம்பேடு மெட்ரோ ரயில் பணிமனையில் தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

சென்னை மெட்ரோ ரயிலில் பயணம் செய்வோர், தங்களிடம் உள்ள மெட்ரோ ரயில் பயண அட்டையை பயன்படுத்தி, மெட்ரோ ரயில் பயணம், வீட்டுக்கும் மெட்ரோ ரயில் நிலையத்துக்கும் இடையேயுள்ள பயணம் மற்றும் இதர சில்லறை செலவினம் உள்ளிட்ட அனைத்து செலவுகளையும் மேற்கொள்வதற்கு வசதியாக மாற்றியமைப்பது சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது.

இதன் முன்னோடியாக எழும்பூர், அண்ணாநகர் கிழக்கு, திருமங்கலம், கோயம்பேடு, வடபழனி, ஆலந்தூர், வண்ணாரப்பேட்டை, மண்ணடி, உயர் நீதிமன்றம், அரசினர் தோட்டம், எல்.ஐ.சி. ஆகிய 11 மெட்ரோ ரயில் நிலைய வாகன நிறுத்தும் இடங்களில் 'அப்னா பே' திறன்மிக்க விற்பனை முனைய இயந்திரத்தின் உதவியுடன், தற்போதுள்ள மெட்ரோ ரயில் பயண அட்டையைப் பயன்படுத்தி வாகன நிறுத்தக் கட்டணத்தை செலுத்த முடியும். இதற்கு கிடைக்கும் வரவேற்பைப் பொருத்து அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

மெட்ரோ ரயில் திட்டத்தின் 2-ம் கட்ட பணிகள் விரைவில் தொடங்கவுள்ளன. 52.01 கி.மீ. நீளத்திலான மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும், மாதவரம் முதல் சென்னை புறநகர் பேருந்து நிலையம் வரையிலும் 2 வழித்தடப் பகுதிகளிலும் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த விழாவில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவன உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.